**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 356/2022**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மருத்துவர். செந்தில் குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. விஸ்வநாதன்** | **Calling** | : | |
| **Village** | : | **அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **51** |
| | | | **Dated** | : | **05.03.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 14 **மருத்துவர். செந்தில் குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 10 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது திண்டுக்கல், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி உறைவிட மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 11.11.2013ம் தேதியில் மேற்படி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்தபோது 55 வயது மதிக்கத்தக்க முருகன் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை, தனது வீட்டின் அருகில் அடையாளம் தெரிந்த மூவர் மற்றும் அடையாளம் தெரியாத மூவர் 11.11.2013ம் தேதி அன்று இரவு 09.10 மணி அளவில் கடப்பாறை, கம்பி, மண்வெட்டியின் கைப்பிடி ஆகியவற்றை கொண்டு தாக்கியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதித்ததில்

அவருக்கு 3x5 cm இரத்தக் கட்டு வலது கையில் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். அவருக்கு X–ray எடுத்ததில் எலும்பு முறிவு இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். காயச் சான்றிதழ் Ex. P3.

அன்றைய தினமே இரவு 09.35 மணிக்கு 21 வயது மதிக்கத்தக்க வெங்கடேஷ்குமார் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை, தனது வீட்டின் அருகில் அடையாளம் தெரிந்த மூவர் மற்றும் அடையாளம் தெரியாத மூவர் 11.11.2013 ம் தேதி அன்று இரவு 09.10 மணி அளவில் கடப்பாறை, கம்பி, மண்வெட்டியின் கைப்பிடி ஆகியவற்றை கொண்டு தாக்கியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு 1 x 1 cm அளவில் சிராய்ப்பு வலது முழங்கையில் காணப்பட்டது, 1 x 0.5 cm அளவில் சிராய்ப்பு இடது உள்ளங்கையில் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். அவருக்கு X–ray எடுத்ததில் எலும்பு முறிவு இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். காயச் சான்றிதழ் Ex. P4. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

காயம்பட்ட நபர்கள் மருத்துவமனைக்கு வந்தவுடன் நான் போலீசாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலின்படி மேற்படி இருவரும் தங்கள் வீட்டில் நடந்ததாக சொல்லி உள்ளார்கள். ஒரு நபர் சாதாரணமாக நிலை தடுமாறி கீழே விழுந்தால் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.05 18:25:47 +0530